Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 49 of 2025**

**Deposition of P.W.11 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சந்திரசேகரன் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of February 2026.

(Accused present.)

**முதல்நிலை விசாரணை:**

நான் தற்போது ராசிபுரம் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.05.2023 அன்று காலை 8 மணிக்கு கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் நானும், கிராம நிர்வாக அலுவலரும் இருந்த போது சடையன் மகன் விஜயகுமார் என்பவர் எங்கள் அலுவலகத்தில் ஆஜரானார். அவர் ஆஜர் எதிரி தான். அவர் தனது சித்தப்பா சேட்டு என்கிற தங்கராஜை கத்தியால் குத்தி கொலை செய்து விட்டதாகவும், தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு கிராம நிர்வாக அலுவலரிடம் வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தை விஏஓ பதிவு செய்து நானும், விஏஓ–வும் கையெழுத்து போட்டோம். எதிரி விஜயகுமாரும் அதில் கையெழுத்து போட்டார். என்னிடம் காட்டப்படும் எதிரி விஜயகுமார் எங்கள் கிராம நிர்வாக அலுவலரிடம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து அ.சா.ஆ.7 ஆகும். நானும், கிராம நிர்வாக அலுவலர் வரதராஜன் என்பவரும் ராசிபுரம் கிராம நிர்வாக அலுவலகத்தில் 1 வருடம் சேர்ந்து வேலை பார்த்தோம். அதனால் அவருடைய எழுத்தும், கையெழுத்தும் எனக்கு நன்கு தெரியும். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து விஏஓ வரதராஜருடையது தான். அந்த கையெழுத்து அ.சா.ஆ.8 ஆகும். அதன்பிறகு, விஏஓ தனி அறிக்கை தயார் செய்து

எதிரி விஜயகுமாரை விஏஓ காவல் ஆய்வாளரிடம் காலை 9.30 மணிக்கு ஆஜர்படுத்தி எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அவரது தனிஅறிக்கையுடன் சமர்பித்தார். அந்த தனிஅறிக்கையில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். அந்த தனிஅறிக்கையில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.9 ஆகும். அதில் உள்ள விஏஓ-வின் கையெழுத்து அ.சா.ஆ.10 ஆகும். பிறகு, இன்ஸ்பெக்டர் எதிரியை எங்கள் முன்னிலையில் கைது செய்து எதிரி கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்தார். அதில் நானும், விஏஓ-வும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளோம். அதில் எதிரி விஜயகுமாரும் சாட்சி கையெழுத்து போட்டார். எதிரி தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் கொலைக்கு பயன்படுத்திய கத்தி ஒன்றையும் அவர் அணிந்திருந்த ரத்தக்கறை படிந்திருந்த முழுக்கைசட்டை, ரத்தக்கறை படிந்த அரைக்கால் டிராயர் வீட்டில் கட்டிலுக்கடியில் ஒளித்து வைத்திருப்பதாகவும், தன்னை அழைத்து சென்றால் அவற்றை எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறினார். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியமாக அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.11 ஆகும். அதன்பேரில் காவல் ஆய்வாளர் எதிரியையும், என்னையும் விஏஓ-வையும் எதிரி வீட்டிற்கு அழைத்து சென்றார். 12.45 மணிக்கு போனோம். அப்போது எதிரி தனது வீட்டில் கட்டிலுக்கடியில் மறைத்து வைத்திருந்த கத்தி அவர் அணிந்திருந்த ரத்தக்கறை படிந்த முழுக்கை சட்டை, ரத்தக்கறை படிந்த அரைக்கால் டிராயர் ஆகியவற்றை எடுத்து ஆய்வாளரிடம் ஆஜர் செய்தார். அதை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினார். அந்த மகஜரில் நானும், விஏஓ-வும் சாட்சியாக கையெழுத்து போட்டோம். மகஜரில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த மகஜர் அ.சா.ஆ.12 ஆகும். எதிரி ஆஜர்படுத்தி கைப்பற்றப்பட்ட கத்தி, முழுக்கை சட்டை, அரைக்கால் டிராயர் பார்த்தால் அடையாளம் காட்டமுடியும். அவை என்னிடம் காட்டப்படுபவை தான். மேற்படி கத்தி அ.சா.பொ.1 ஆகும். சம்பவ சமயம் எதிரி அணிந்திருந்த ரத்தக்கறை படிந்த முழுக்கை சட்டை அ.சா.பொ.2 ஆகும். ரத்தக்கறை படிந்த அரைக்கால் டிராயர் அ.சா.பொ.3 ஆகும். பின்பு இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

கிராம நிர்வாக அலுவலர் எனக்கு உயர் அதிகாரி. அவர் சொல்லும் வேலைகளை நான் செய்து வருவேன் என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் கம்ப்யூட்டர் உள்ளது. அதை பயன்படுத்தி டைப் செய்வதற்கு தனியாக அலுவலர் இல்லை. விஏஓ-வே டைப் செய்வார். எங்கள் அலுவலகத்திற்கு 200 அடி தூரத்தில் ராசிபுரம் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். எங்கள் அலுவலகம் ராசிபுரம் நகரின் மையப்பகுதியில் உள்ளது. அருகே கடைகள், குடியிருப்பு அதிகம் உள்ளது. விஏஓவிற்கு காவல் நிலைய தொலைபேசி எண் தெரியும். அதுபோல, காவல் நிலையத்திற்கு விஏஓ-வின் செல்போன் எண் தெரியும். சம்பவம் நடந்த இடத்திற்கும், விஏஓ அலுவலகத்திற்கும் இடையே 1கி.மீ தூரத்திற்கு மேல் இருக்கும். எதிரி கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்தை விஏஓ 3 பிரதியாக தயாரித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தாரா என்று எனக்கு தெரியாது. விஏஓ அவரது பணி குறித்த நாட்குறிப்பை பராமரித்து வந்தார். எதிரியிடம் விஏஓ யார் சொல்லி எப்படி அலுவலகத்திற்கு வந்தார் என்பது குறித்து கேட்கவில்லை. எதிரி என்ன படித்திருக்கிறார் ? அவருக்கு எழுதப்படிக்க தெரியுமா ? என்பது பற்றி விஏஓ எதிரியிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. விஏஓ, எதிரி சரணடைந்தவுடன் காவல் நிலையத்தை தொடர்பு கொண்டு சம்பவம் பற்றி கேட்டு தெரிந்து கொண்டாரா என்று எனக்கு தெரியாது. வாக்குமூலம் எதிரியிடம் படித்து காட்டப்பட்டு கையெழுத்து வாங்கியதாக அதில் சொல்லப்படவில்லை. எதிரி விஜயகுமார் சொல்ல சொல்ல எங்கள் அலுவலகத்தில் கண்ணன் என்பவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டதாக வாக்குமூலத்தில் குறிப்பு உள்ளது. நான் சொல்வது போல. சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் எதிரி எங்கள் அலுவலகத்திற்கு வந்து சரண்டர் ஆகவில்லை என்றும், அவர் எந்தவொரு வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், அவர் கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் நிலயத்தில் வைத்து தயார் செய்து அதில் நானும், விஏஓ-வும் கையெழுத்து செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல நாங்கள் ஆய்வாளர் மற்றும் எதிரியுடன் எதிரியின் வீட்டிற்கு போகவில்லை என்றும், எதிரி கத்தி மற்றும் அவர் அணிந்திருந்த சட்டை மற்றும் டிராயரை எங்கள் முன்னிலையில் ஆய்வாளரிடம் ஆஜர் எதிரி மகஜரில் கைப்பற்றவில்லை என்றும்,

போலீசார் கேட்டு கொண்டதன் பேரில் நானும், விஏஓவும் காவல் நிலையத்தில் வைத்து மகஜரில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. விஏஓ ஒப்புதல் மகஜரை டைப் செய்யவில்லை என்றும், அவருக்கு டைப் செய்ய தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. போலீசார் கேட்டு கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.